107

| Class | 378.013 |
| --- | --- |
| No | C31 |


# மட்டக்களப்புக் கல்வி வலயப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலை மட்ட ஆசிரியர் தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் விளைதிறன்

# THE EFFECTIVENESS OF IMPLEMENTING SCHOOL BASED TEACHER PROFESSIONAL DEVELOPMENT PROGRAMME IN THE SCHOOLS OF BATTICALOA EDUCATIONAL ZONE

OUSL Library.
Donated by.
Dr. W. M. S.
Wanasinghe

**ந. சந்திரகுமார்**

N. CHANDRAKUMAR

**பதிவிலக்கம்** : 713276371

**கல்வியாண்டு** : 2013 / 2014

OPEN UNIVERSITY
74475

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் கல்வி முதுமாணிப் பட்டக் கற்கை நெறிக்கான பகுதித் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு இவ்வாய்வு சமர்ப்பிக்கப்படுகின்றது.

OPEN UNIVERSITY OF SRI LANKA
LIBRARY

**Department of Secondary and Tertiary Education**
**Faculty of Education**
**The Open University of Sri Lanka**

# The Effectiveness of Implementing School Based Teacher Professional Development Programme in the Schools of Batticaloa Educational Zone

**By**
**NAVARATNAM CHANDRAKUMAR**

**Reg. No : 713276371**
**Academic Year : 2013 / 2014**

**This Dessertation is Submitted in Partial Fulfillment for the award of the Degree of Master of Education of Open University of Sri Lanka.**

# ஆய்வுச் சுருக்கம்

மட்டக்களப்புக் கல்வி வலயப் பாடசாலைகளில் பாடசாலை மட்ட ஆசிரியர் தொழில்சார் அபிவிருத்தித் திட்டங்கள் எந்தளவு விளைதிறனுடன் நடைமுறைப்படுத்தப்பட்டன என்பதைக் கண்டறியும் பிரதான நோக்கத்தை அடைவதற்காக ஆறு சிறப்பு நோக்கங்களும், 16 ஆய்வு வினாக்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வை வழிநடத்துவதற்கான எண்ணக்கருச்சட்டகம் வடிவமைக்கப்பட்டது. இவ்வாய்வானது தொகை மற்றும் பண்புசார்ந்த ஆய்வு அணுகுமுறையையும், மதிப்பீட்டு ஆய்வு வடிவத்தையும் பயன்படுத்தி மேற்கொள்ளப் பட்டது. இவ்வாய்வு மட்டக்களப்புக் கல்வி வலயத்திலுள்ள 63 பாடசாலைகளிலிருந்து 32 அதிபர்கள், 164 ஆசிரியர்கள் ஆகியோர் எளிய எழுமாற்று விகிதப்படையாக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டனர். அத்தோடு நான்கு SBTPD குழு இணைப்பாளர்கள், நான்கு பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுக்கள் ஆகியோர் எளிய எழுமாற்று மூலம் தெரிவு செய்யப்பட்டனர். அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்து லிக்கார்ட்டின் அளவுத்திட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்ட, கட்டமைக்கப்பட்ட மூடிய வினாக்கொத்துக்கள் மூலம் தரவுகள் திரட்டப்பட்டன. SBTPD குழு இணைப்பாளர்களிடமிருந்து நேர்காணல் மூலமும், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களிடமிருந்து இலக்குக்குழு கலந்துரையாடல் மூலமும் தரவுகள் திரட்டப்பட்டன. இரண்டாந் நிலைத் தரவுகள் ஆவணப்பகுப்பாய்வு மூலம் திரட்டப்பட்டன. ஆய்வுகருவிகள் மூலம் திரட்டப்பட்ட தரவுகள் யாவும் தொகை சார்ந்த தரவுகளாக மாற்றப்பட்டு, விபரணப் புள்ளிவிபரவியல் அடிப்படையில் M.S Excel, SPSS 16.0 மென்பொருட்கள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு, அவற்றின் மீடிறன், சதவீதம், சராசரிச் சதவீதம், இடை, நியமவிலகல் ஆகியன கண்டறியப்பட்டன. அவை அட்டவணைகள், வட்ட வரைபுகள், சலாகை வரைபுகள் மூலம் முன்வைக்கப்பட்டு ள்ளன. இவ்வாய்வின் பிரதான கண்டுபிடிப்புக்கள் ஆசிரியர் தொழில்சார் அபிவிருத்தித் திட்டங்களைத் திட்டமிடுதல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல், மீளாய்வு செய்தல் ஆகியவற்றில் குறைபாடுகள், ஆசிரியர்களின் எதிர்பார்ப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டமை குறைவு, ஆசிரியர்களுக்கு அனுபவப் பகிர்வு மற்றும் பிரதிபலித்துக் கற்றலுக்கான வாய்ப்புக்கள் குறைவு, மாணவர் அடைவு மட்டம் மேம்படுத்தப்பட்டமை குறைவு, பாடசாலை யின் பண்புத்தர விருத்தி குறைவு. இவ்வாய்வின் விதந்துரைப்புக்கள் அதிபர்கள், SBTPD குழுவினர், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுவினர் ஆகியோருக்கு ஆசிரியர் தொழில்சார் அபிவிருத்தித் திட்டத்தை திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் வழங்குதல், ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தொழில்சார் அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக விழிப்புணர்வையும், ஊக்குவிப்பையும் வழங்குதல், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் SBTPD நிகழ்ச்சித் திட்டத்தை விளைதிறனுடன் நடைமுறைப்படுத்தக் கூடியவாறு பாடசாலைகளை வலுவூட்டுதல். இறுதியாக வருடாந்த பாடசாலை மட்ட ஆசிரியர் தொழில்சார் அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கான புதிய திட்ட மாதிரிகையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



திறவுச் சொற்கள் : பாடசாலை மட்ட ஆசிரியர் தொழில்சார் அபிவிருத்தி, மாணவர் அடைவு, அனுபவப் பகிர்வு, பிரதிபலித்துக் கற்கும்திறன், பண்புத்தர விருத்தி, விளைதிறன்

# Abstract

The main purpose of this research was to find out how effectively the School Based Teacher Professional Development Programmes were Implemented in the Batticaloa Educational Zone. According to six specific objectives and sixteen research questions were formulated. Based on them, the concept map was created to conduct this research. This research was conducted using quantitative, qualitative and evaluative research approach.

A total of 32 principals, 164 teachers were selected using simple random ratified sampling method for the research. Further, 4 SBTPD Co - ordinators, Members of School Development Executive Committee were also selected using simple random sampling method from 63 schools in Batticaloa Educational Zone. Data was collected from principals and teachers using closed structured questionnaires with likerts' scaled method. Inorder to collect data from SBTPD Co - ordinators and Members of School Development Executive Committiee interview and focus group discussion were carried out. The secondary data was collected by analysing the relevant documents through desk review. Data collected were transformed into quantifiable data and their frequency, percentage, mean, standard deviation and avarage percentage were calculated using Ms Excel and SPSS 16.0 computer softwares. They have been presented in tables, pie charts and bar charts.

The main findings of this research are : lack of proper planning, implementation , monitoring and review of School Based Teacher Professional Development Programmes and the meeting of expectations and needs of teachers remains at a low level. The findings also informs less opportunities for teachers to share their experience and Reflective Learning skill. Futher, School Qualitative Improvement, Effectiveness, with regard to teacher professional development at school level is not effective. Student's achievement level is also identified to be a short coming.

Recommendations of this research are : it is necessary to provide an awareness to the principals, SBTPD Co - ordinators and Members of School Development Executive Committiee about the School Based Teacher Professional Development Programmes. And also it is very important to make aware of the teachers about such programmes and encourage them to take part effectively. Further, Zonal Director should empower the schools to plan and implement such programmes. Finally, a model annual School Based Teacher Professional Development plan has been developed and introduced.

Key Words : School Based Teacher Professional Development , Student's Achievement, Learing Experience sharing, Reflective Learning skill, Quality Development Proces.